www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

தை 2001

இதழ்-22

"ஆமியும் தலைதெறிக்க ஓடுது, பொய்,பேச்சுக்களும் உலகத்துக்கு தெரிஞ்சிட்டுது போல பிரான்ஸ்சிலயும் காசு குடுக்கேல்லயாம் என்னெண்டு அம்மையார் சண்டைபிடிக்கப்போறாவோ"

சனத்தின் குரல்

# மக்கள் எழுச்சியில் உரம் பெறும் தேச விடுதலை!



தேசம் தழுவிய தொடர்ச்சியான மக்கள் போராட்டங்கள் தான் தமிழீழ விடுதலை போராட்டத்திற்கு ஆரம்ப அரசியல் அடித்தளத்தை உருவாக்கின. அந்தத் தளத்தில் ஆயுதப் போராட்டம் உருவானது. போராட்ட அமைப்புகளிடம் மேலோங்கியிருந்த ஆயுத கலாச்சாரம் மக்கள் போராட்டத்திற்கான முக்கியத்துவத்தை புறக்கணித்திருந்தது. மீளவும், ஆயுதப் போராட்டத்தினால் ஈட்டப்பட்டுவரும் அரசியல் வெற்றிகளை பலப்படுத்தி வளர்த்தெடுக்கும் தாங்கு சக்தியான மக்களின் அரசியல் தலைமைத்துவம் நோக்கி அனைத்து தடைகளையும் கடந்து விடுதலைப் போராட்டம் நகரத் தொடங்கியுள்ளது.

இன்று நமது தேசம் அரசியல் ரீதியில் புதியதொரு வெற்றிகரமான பரிமாணத்தை அடைந்திருக்கிறது. இதுவரைகாலமும் சிங்கள அரசும் பல்வேறு அந்நிய ஆதிக்க சக்திகளுமே தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை நம் தேசத்தின் மீது திணித்து, தமது அரசியல் நலன்களுக்கு ஏற்ப நம்மை இழுத்துச் செல்ல முயற்சித்து வந்துள்ளனர். ஆனால் இம்முறை விடுதலைப் புலிகள் இப்போக்கிற்கு முடிவு கட்டுமுகமாக, தம்மால் ஈட்டப்பட்டு வந்துள்ள இராணுவ/அரசியல் வெற்றிகளின் பலத்தில் நின்று தாமே முன்வந்து யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்தியிருப்பதன் மூலம் நமது தேசத்தின் அரசியல் ஆளுமையை சிங்கள அரசின் மீது உலகறிய நிறுவியுள்ளனர். சிறிலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சரே தமது அரசின் அரசியல் தோல்வியை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுமளவுக்கு சிங்கள அரசின் ஆக்கிரமிப்பு அரசியல் நமது தேசத்தால் தோற்கடிக்கப்பட்டு வருகிறது.

அரசியல், இராஜதந்திர வழியில் எதிரியைத் தோற்கடிக்கும் கலையில் போராட்டத் தலைமையின் ஆளுமை ஒருபுறம் வளர்ச்சியுற மறுபுறம், அதை உறுதிப்படுத்தும் பலமான சக்தியாக போராட்டத்தில் மக்களின் விரிவான பங்கேற்பு விரிவடைந்து வருகின்றது. தென்தமிழீழத்திலிருந்து வட தமிழீழம் வரை நடைபெற்றுவரும் மக்கள் எழுச்சி தேச அரசியலை இன்னும் வீரியமாக முன்னகர்த்துவதாகவே அமைகிறது.

இராணுவ வெற்றிகளும் அதனைத்தொடர்ந்து வரும் அரசியல் வெற்றிகளும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள நம்பிக்கைகளும், அவர்கள் தம் பங்கிற்கு இவ்வெற்றிகளை மேலும் பலப்படுத்துவதும், தேச விடுதலை உணர்வுகள் மேலும் திரண்டு குவிதலும், சட்ட எல்லைகளுக்குள்ளும் அதற்கப்பாலும் செயற்பாடுகள் ஊடுருவிப் படர்ந்து செல்லுவதும் காத்திரமான அரசியல் முன்னேற்றங்களாகும்.

20 வருடகால ஆயுதப் போராட்டத்திற்கு தம்மையே உருக்கி வார்த்து வந்துள்ள மக்கள் இன்று தமது தேசிய அரசியல் நிலைப்பாட்டை பலப்படுத்த

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## புதைக்கப்படும் சிறுவரும் சிறுவர் உரிமைகளும்

மிருசுவிலில் சிங்களப் படைகளினால் கொத்திக் குதறிப் புதைக்கப்பட்ட ஐந்து வயது பாலகனின் மரண ஓலம் இன்னும் நம் நெஞ்சில் எதிரொலித்துக் கொண்டு தான் இருக்கிறது.

சிறுவர் உரிமைகளை விடுதலைப் புலிகள் மீறுகிறார்கள், சிறுவர்களை போர்முனைக்கு அனுப்புகிறார்கள் என "தமிழீழச் சிறுவர்களின் உரிமைக்காக" உலகெங்கும் சென்று பிரச்சாரம் செய்யும் சிங்களத் தலைவர்களும், இவர்களுக்கு மிக்கவுமே பரிந்துவரும் "மனித உரிமைப் பாதுகாவலரான" ஐ.நா.வும், சிங்கள அரசின் ஊதுகுழலாய் செயற்படும் சிறிலங்கா, இந்திய ஊடகவியலாளர்களும் இவ்விடயத்தில் கடும் மௌனத்தைக் கடைபிடிக்கின்றனர். எங்கே போயிற்று இதுநாள் வரை இவர்கள் எழுப்பிவந்த சிறுவர் உரிமை முழக்கங்கள் எல்லாம்.

நமது தாயகத்திலேயே நமது பிள்ளைச் செல்வங்களை குதறிப் புதைத்திடும் இந்தக் கொடுமைக்கு விரைவில் முடிவுகட்டுவோம். கொலையாளிகளிடமிருந்து நம்பிள்ளைகளைப் பாதுகாப்போம்.

## உணவளிக்கும் உழவர் திருநாள்



## விடுதலைக்கு அணிதிரள அறைகூவும் மாணவர்

அண்மையில் யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பகிரங்கமாகவே ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை, தேசிய அபிலாசைகள்குறித்து அரசியல் தளத்தில் தம்மை வெளிப்படுத்தியுள்ளனர். பல்கலைக்கழகத்தின் போதனை மற்றும் நிர்வாகப்பிரிவுகளுடன் இணைந்து போராட்டம நடாத்தியுள்ளனர்.மக்கள் அமைப்புகளுடனும், மனிதநேய அமைப்புகளுடனும் அவர்கள் தமது கரங்களை இணைத்தக்கொண்டுள்ளனர். இதற்கு சற்று முன்னர், மிருசுவில் கோரக் கொலைகளை கண்டித்து யாழ்பல்கலைக்கழக கலைப்பீடம் அறிக்கை விடுத்துள்ளதுடன், தேசிய விடுதலை நோக்கி அனைவரையும் அணிதிரளுமாறு அறைகூவல் விடுத்துள்ளது.பல்வேறு பட்ட சமூக சக்திகள் இக்குரல்களுடன் தமிழீழ மக்கள் கட்சி தனது குரலையும் இணைத்துப்பலம் சேர்ப்பதில் பெருமை அடைகின்றது. இவற்றின் மூலம் மக்கள் பிரிவினர் எப்போதும் சரியான சமயத்தில் சரியான விதத்தில் சாரி சாரியாகத் திரண்டு தமது வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றுவர் என்பது மீளவும் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

மக்களின் விடுதலைப் போராட்டங்களில் மாணவர் சக்தியின் பாத்திரமானது மாபெரும் வலிமையாய் திகழ்ந்ததை வரலாறு நெடுகிலும் நாம் காண்கின்றோம். நமது விடுதலைப்போராட்டத்தின் திசையில் பாரிய திருப்புமுனைகளையும் ஆழமான வரலாற்றுப்பதிவையும் எழுபதுகளின் முற்பகுதியில் ஏற்படுத்தியதில் மாணவர்பேரவையின் பாத்திரம் போற்றிப்புகழத்தக்கதாகும்.

யாழ்பல்கலைக்கழக மாணவர்களின் அரசியல் குரலானது மேலும் பல மாணவர் அமைப்புகளின் திரட்சிபெற்ற குரலாக இணைந்து பலமும் வீரியமும்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்

www.tamilarangam.net

# நம்தேசமும் விட்டுக்கொடா இறைமையும்!



"சிறிலங்கா அரசின் இறைமை", "பிரதேச ஒருமைப்பாடு", "ஆள்புல எல்லைக்குட்பட்டதாக தமிழர்களுக்கு ஒருநியாயமான அரசியல்தீர்வு" என்பன ஏகாதிபத்திய அரசுகள் முன்வைத்துள்ள நிபந்தனைகளாகும். நமது தேசத்தின் அடிப்படை நலன்களைப் பொறுத்தவரையிலோ இந்த முன்நிபந்தனைகளானது நம்மை நெருங்கிவரும் புதிய வகை அடக்குமுறை வடிவமாகும். சந்தர்ப்பம் பார்த்து நம்மீது திணிக்கும் மோசமான நிபந்தனையாகும். ஒருபுறம் அவர்கள் நமது தேசத்திற்காக சமத்துவம், நியாயம் கேட்பது போல் தோன்றினாலும், உண்மையில் இது சிறிலங்கா அரசின் அத்திவாரத்தை ஆதிக்க சக்திகளின் நலனில் இருந்து பாதுகாக்கும் சதிமோசச் செயலாகும்.

இறைமை என்பது, ஒரு அரசியல் சமூகம் தம்மைத்தாமே ஆட்சிசெய்து கொள்வதற்கான தான் கொண்டுள்ள அதிகாரமாகும். இம்மக்கள் தமக்கென அரசியல் முறைமையையும் அரசியல் ஏற்பாடுகளையும் வடிவமைத்துக்கொண்டு தம்மைத்தாமே ஆள்வதற்கான பாத்தியதையே அம் மக்களின் இறைமை என்பதாகும். ஈழத்தமிழரான நாம்தனியான தேசம் என்ற வகையில், தம்மைத்தாமே ஆள்வதற்கான இறைமையை கொண்டவர்கள் ஆவோம். இந்த இறைமை மீது சிறிலங்கா அரசு மட்டுமல்ல, வேறு எந்த அரசுகளும்கூட கைவைப்பதை நமது தேசம் அனுமதிக்காது.

மேற்குலக எஜமானர்கள் சிறிலங்கா அரசின் இறைமை பற்றி அழுத்துகின்றார்கள். இறைமையென்பது யாருக்கானது? மக்களுக்கானதா? அரசுக்கானதா? முதன்மையானது எது? அரசா? மக்களா? அரசுக்காக மக்களா? மக்களுக்காக அரசா?

உண்மையில், மக்கள் தமது இறைமையை ஒரு சந்தர்ப்பத்தில் தமது பிரதிநிதியாகக் கருதிய அரசுக்கு தற்காலிமாக ஒப்படைக்கின்றார்கள். பொறுப்பளிக்கப்படும் அரசானது தன் கடமையைச் சரிவர ஆற்றாது விடின், தற்காலிகமாக தம்மால் பொறுப்பளிக்கப்பட்ட இறைமையை மக்கள் அரசு இயந்திரத்திடம் இருந்து எப்போது வேண்டுமானாலும் மீளப்பெற்றுக்கொள்ள முடியும்.

ஈழத்தமிழரின் வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய ஆதிக்க சக்திகளால் நம் இறைமை பறித்தெடுக்கப்பட்டது. பிடுங்கிக்கொள்ளப்பட்ட இந்த இறைமையானது ஐம்பத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நமது மக்களைக் கலந்து கொள்ளாது, நமது மக்களின் விருப்பத்திற்கு எதிராக, நமது மக்களுக்கே புரியாத ஒரு இரகசிய ஏற்பாட்டின் கீழ், எழுதப்படாத திருட்டு ஒப்பந்தத்தின் கீழ் சிங்கள ஆளுங்குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஐம்பத்தியிரண்டு வருட காலத்தில் நம்மீது இரட்டை சூறையாடல் இரட்டை அடக்குமுறைகள், ஒன்று நவகொலனித்துவம் மற்றது சிங்கள சோவினிசம் என தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. பெரும் பங்கை ஏகாதிபத்தியங்களும், இன்னுமொரு கணிசமான பங்கினை சிங்கள ஆளுங்குழுமமும் அபகரித்துக்கொண்டன.

இந்த இரட்டைச் சூறையாடலுக்கு இன்று முடிவு நெருங்கிக் கொண்டிருப்பது கண்டு அவர்கள் விழிப்படைந்து விட்டார்கள். நமது இறைமையை இதுவரை காலமும் அனுபவித்து வந்த ஏகாதிபத்தியங்கள், தற்போது தமது ஆதிக்க அத்திவாரத்திற்கே ஆபத்து வந்ததைக் கண்டுகொண்டதால் சிங்கள ஆளுங்குழுமத்திற்கு பாதுகாப்புக் கொடுக்க முன்வந்துள்ளார்கள்.

இன்றைய வல்லரசுகளின் அன்றைய மக்கள் தமது நீண்ட வரலாற்றில் எவ்வாறு தத்தமது இறைமைகளை தாபித்துக்கொண்டார்கள்? எத்தனை எத்தனை போர்கள்? இரத்த ஆறுகள்?.

ஈற்றில் ஆளுங்குழுமங்கள், மக்களால் போராடிப்பெற்ற இறைமைகளை அரசினூடாக தமதாக்கிக் கொண்டதோடு, இன்று இறைமை என்பதை அரசுக்குரியதாக தாபித்துக்கொண்டுள்ளன. இதே வல்லரசுகள், சோவியத் யூனியனின் பிளவின் போது சோவியத்யூனியன் அரசின் இறைமையை காப்பாற்ற ஓடோடி வராமல், தாம் அடக்கப்பட்ட தேசங்களின் பக்கம் என ஆரவாரம் செய்தார்கள். அன்று மக்களினதும் தேசங்களினதும் இறைமைபற்றி சிலாகித்தவர்கள், இப்போது சிறிலங்கா அரசின் இறைமை பற்றி அக்கறைப்படுகின்றார்கள். இறைமை பற்றிய இவர்களின் கோட்பாடுகளும் நடைமுறைகளும் இன்று தலைகீழாகப் புரட்டப்பட்டுக் கிடக்கின்றன.

எமது மக்களின் இறைமையை யாருக்காகவும் எதற்காகவும் நாம் விட்டுக்கொடுக்க முடியாது. விட்டுக்கொடுக்கவும் மாட்டோம். நமது மக்களின் சமாதான வழிப்பட்ட தீர்வு முயற்சிக்கான சம்மதத்தை தாம் நடாத்தும் இறைமையின் பேரத்திற்கான சம்மதமாக எடுத்துக்கொள்வது போன்றே அவர்களது செயற்பாடுகள் அமைந்து வருகின்றன. போகட்டும். இந்த விடயத்தில் நாம்மிகத்தெளிவுடன்இருப்போம்.

சிறிலங்கா அரசின் இறைமை என்ற பெயரில், அனைத்து மக்கள் சமூகங்களின் இறைமைகளையும் அரசு யந்திரத்திற்கு உடைமையாக்கிக்கொள்வது ஏகாதிபத்தியங்கள் தமது சூறையாடல் பேரங்களை அதனுடனும் அதிலுள்ளவர்களுடனும் நடாத்துவதற்கு மிக வாய்ப்பாகின்றது. சிங்கள தேசத்தின் இறைமை கூட, யதார்த்தத்தில் தற்போது சிங்கள மக்களிடம் இல்லை. நிறங்களை மாற்றிக்கொண்டு காலத்திற்கு காலம் ஆட்சிநடாத்தும் ஆளுங்குழுமங்களினதும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு யந்திரத்தினதும் கைதியாக உள்ளது.

சமகாலத்தில் இன்னுமொரு விடயத்தையும் கவனத்தில் கொள்வோம். எம்முடைய இறைமையை எவரும் பறிக்க முடியாதது போலவே, எந்த சக தேசங்களினுடைய இறைமையையும் நாம் பறிக்க முடியாது. இரண்டுவகை பறிப்புகளையும் நாம் எதிர்த்து நிற்போம். ஒன்று நம்மீது போடப்பட்ட அடிமை விலங்கை. மற்றது நமக்கு நாமே போட்டுக்கொள்ளும் அடிமை விலங்கை. அது மட்டுமல்ல, சிறிலங்கா அரசினால் அடக்கப்படும் சக தேசங்களின் இறைமைக்காகவும் ஏன், சிங்கள மக்களின் இறைமைகளை ஆளுங்குழுமமும், ஏகாதிபத்திய சக்திகளும் கூட்டாக பிடுங்குவதற்கு எதிராக அந்த மக்கள் நடாத்தும் ஜனநாயக, புரட்சிகர போராட்டங்களையும் கூட நாம் ஆதரித்துப்பலப்படுத்துவோம்.

அன்று, ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தாலும் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குள் உருவாகிடாத தனித்துவமான அரசியல் அபிலாசைகளானது, இன்னுமொரு சமூகத்தினுள் இன்றைய வேகமான

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## மக்கள் எழுச்சி...

1ஆம் பக்க தொடர்ச்சி

அரங்கிற்கு வருகிறார்கள். யாழ்பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் முன்கையெடுப்பிலும் தலைமைத்துவத்திலும் பல்வேறு வெகுஜன ஸ்தாபனங்கள், நிறுவகங்கள், பொது மக்கள் திரண்டு ஒரே குரலில் ஈழத்தமிழரின் சுயநிர்ணயத்தை பிரகடனப்படுத்தி நிற்கின்றனர்.

சர்வதேச சமூகங்களின் கவனம் நமது தேசத்தின்பால் ஈர்க்கப்பட்டுள்ள இக்குறிப்பான சூழலில், தேசத்தின் இறைமைக்காக உயர்ந்திடும் நமது மக்களின் உரிமைக்குரல், மெய்யான விடுதலைக்கும் சமாதான வாழ்வுக்குமான ஈழத்தமிழரின் தணியாத அவாவை முரசறைவதுது நிற்கிறது.

இதனையே இன்று நமது தேசம் வேண்டி நிற்கிறது. வட தமிழீழத்தில் மக்கள் திரட்சியின் மத்தியில் ஒலிக்கும் சுயநிர்ணயத்திற்கான உரிமைக்குரல் தமிழீழத் தாயகமெங்கும் வியாபித்திட வேண்டும். நமது மக்கள் அனைவரும் ஓரணி திரண்டு ஒரே குரலில் எமது தேசிய இறைமையை, சுயநிர்ணயத்தை பிரகடனப்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் இதயத்திலிருந்து பிறப்பெடுக்கும் இந்த உரிமைப் பிரகடனம் உலகைக் குலுக்கும் ஆளுமை மிக்கதாகும். எதிரியை நிலைகுலையச் செய்யும் வல்லமை மிக்கதாகும்.

மக்களின் பங்கேற்பில் பலம்பெற்று வரும் தேசத்தின் உயிரோட்டமான அரசியல் பிரவாகத்தில் எதிரியை முறியடிப்போம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள தேசத்துடன் சமாதானம் சாத்தியமா???

இலங்கைத் தீவின் கடந்த ஒரு நூற்றாண்டுகால வரலாற்றில் யுத்தத்தை முனைவதில் தீவிரம் காட்டி வந்திருக்கும் தரப்பினர் யார்? ஏன் அவர்கள் யுத்தப் பிரியர்களாயும், சமாதானத்திற்கு எதிரானவர்களாயும் இருந்து வருகின்றனர் என்பதை புரிந்துகொள்வது நமது தேசத்தின் இன்றைய கட்ட அரசியல் முன்னெடுப்புகளுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது.

காலனிய ஆக்கிரமிப்பின் விளைவான ஒற்றையாட்சி முறையால் சிங்கள தேசத்துடன் இணைந்து செயற்படும் நிலை ஈழத் தமிழர்களான நமக்கு உருவானது. எனினும் அன்றிலிருந்தே சிங்கள அரசியல் தலைமையானது தமிழ் அரசியல் தலைமை தம்முடன் அதிகாரங்களை பகிர்ந்துகொள்வதை திட்டவட்டமாக நிராகரிக்கத் தொடங்கியது. இது தமிழர்கள் பிரிந்து சென்று தமக்கான தமிழர் மகாஜனா சபையை உருவாக்க காரணமாயிற்று.

அரசியல் தளத்தில் சிங்கள தலைமை எவ்வாறு தமிழர்களது உரிமைகளை புறக்கணித்து அரசதிகாரத்தை தானே முழுமையாக அபகரித்துக்கொள்ள முயற்சித்து வந்ததோ, அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் சிங்கள தேசத்தில் உருப்பெற்று வந்த வர்க்க பிரிவுகளும், சமூக சக்திகளும் சக தேசங்களை வன்மத்துடன் அணுகும் போக்கை வெளிப்படுத்தி வந்தன. 1915ல் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறையுடன் இப்போக்கு பகிரங்கமாக வெளிப்படத் தொடங்கியது.

சிங்கள தேசத்தில் உருவாகிவந்த வர்க்கப்பிரிவுகளையும், சமூக சக்திகளையும் தமக்கு சாதகமாக பாவித்து தம்மைப் பலப்படுத்திய சிங்கள அரசியல் தலைமைகள் ஈழத்தமிழரான நமக்கெதிராக 20களின் ஆரம்பத்திலிருந்தே வெளிப்படுத்தத் தொடங்கிய ஆக்கிரமிப்பை எதிர்த்து, நாம் எமது உரிமைக்காக அமைதியான போராட்டங்களை மேற்கொண்டு வந்ததுடன் தொடர்ந்தும் இலங்கையர் எனும் பொது அடையாளத்துடன் அவர்களுடன் இணைந்து வாழவே விரும்பினோம்.

ஆனால் சிங்கள தேசத்தில் புதிதாக உருவாகிவந்த சமூக சக்திகளும், காலனிய காலத்தில் பாதிப்புக்குள்ளான பிரிவினர்களும், தமது சமூகத் துயரங்களுக்குக் காரணம் ஈழத்தமிழர்களான நாமும், சக தேசங்களுமே எனும் விதமாக நடந்துகொண்டனர். சக தேசங்களுக்கு இலங்கைத் தீவில் உரிமைகள் இல்லை என்பதாக அவர்களது வெளிப்பாடுகள் அமைந்தன. சிங்கள தேசத்தின் இவ்வுணர்வலைகளை பரஸ்பரம் பலப்படுத்திய சிங்கள அரசியல் தலைமைகளும், சித்தாந்தவாதிகளும் சிங்கள இனவெறிப்போக்குக்கு தலைமை தாங்கியதுடன், சிங்கள தேசத்தையும் அந்த இருட்பாதையில் தீவிரமாக வழிநடாத்தத் தொடங்கினர்.

சிங்கள இனவெறி உணர்வு சிறிலங்கா அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக வலுப்பட வலுப்பட நமது அரசியல் வாழ்வு மாத்திரமல்ல, நாம் உயிர்வாழ்வதற்கான அடிப்படை உத்திரவாதமே கேள்விக்குள்ளானது. 56இல் பண்டாரநாயக்கவினால் அமுலாக்கப்பட்ட தனிச் சிங்கள சட்டம் சிங்கள தேசத்தின் இனவெறி அபிலாஷைகளின் விளைவேயாகும்.

தனிச் சிங்கள சட்டத்தின் மூலம் தமிழர்கள் இலங்கையின் தேசிய நீரோட்டத்திலிருந்து தூக்கியெறியப்பட்டதை எதிர்த்து நமது அரசியல் தலைவர்கள் அமைதிவழியில் சத்தியாக்கிரகம் செய்தனர். ஆனால் சிங்கள அரசு எமது அமைதிப் போராட்டத்தை நசுக்கிட ஆயிரக்கணக்கில் குண்டர்களை ஏவி சத்தியாக்கிரகிகளை படுகாயப்படுத்தியதுடன் கைதுசெய்து சிறையிலுமடைத்தது. கொழும்பு நகரிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர். அத்துடன் நில்லாது அம்பாறையிலும் தீவின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் மீது இன வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அடக்குமுறைகளையும் வன்முறைத் தாக்குதல்களையும் தாங்கிக் கொண்டு நமது மக்கள் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஈழத்தமிழரின் போராட்டம் வளர்ச்சியடைவதைக் கண்ட பண்டாரநாயக்க, போராட்டத்தை கட்டுப்படுத்தும் தந்திர நோக்குடன் தமிழர்களின் உரிமைகள் சார்ந்து தந்தை செல்வநாயகம் அவர்களுடன் ஒப்பந்தத்திற்கு வந்தார். பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை எதிர்த்து ஜே. ஆர். தலைமையிலான இனவெறியர்கள் கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொண்டனர். தமிழர்களுக்கு வடக்கு கிழக்கை தாரைவார்த்துக் கொடுத்துவிட்டதாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு சிங்கள மக்கள் இனவெறி ஆவேஷ மூட்டப்பட்டனர். இனவெறி சக்திகளின் கொந்தளிப்புக்கு பயந்துபோன பண்டாரநாயக்க தானே ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்.



இவ்வாறுதான் சிங்கள தேசமும் சிங்கள தலைவர்களும் தமிழர்களின் அமைதியான உரிமைக் கோரிக்கைகளுக்கு பிரதிபலிப்பு செய்தனர்.

தொடர்ச்சியாக நமது தேசத்தால் முன்னெடுக்கப்பட்ட அகிம்சைவழிப் போராட்டங்கள் மிருகத்தனமான தாக்குதல்களுக்கு உள்ளாகின. தமிழ் தலைவர்களை கைதுசெய்தல், தடுப்புக்காவலில் வைத்தல், தொண்டர்களை படுகொலை செய்தல் போன்றன தொடர்ச்சியாக நடைபெற்றன. 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட பொதுமக்கள் சிங்கள பொலிசாரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டதுடன் ஒன்பது பேர் படுகொலைக்குள்ளாகினர்.

அதன் பின்னர் தமிழர் மீது தொடர்ச்சியாக வன்முறைகள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டன. தமிழரின் அரசியல் குரல் மிகவும் வன்மத்துடன் நசுக்கப்பட்டது. காலத்திற்குக் காலம் தமிழர் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு வன்முறைகளை சிங்கள தேசம் விரும்பி வரவேற்றதுடன் சிங்கள பொதுமக்கள் பலரும் தமிழரை அழித்தொழிப்பதில் முன்னின்று செயற்பட்டனர். இப்படியாக சிங்கள அரசும், இனவெறி ஊட்டப்பட்ட சிங்கள தேசமும் நம்மீதான அழித்தொழிப்பில், ஆக்கிரமிப்பில் தமக்குள் பிணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

83இன் பின்னர், தமிழீழ தனியரசே நமக்கான ஒரே தீர்வு என்பது நமது தேசத்தால் முழுமையாக உணரப்பட்டதும், அதன் விளைவான ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சியும் சிங்கள அரசை அச்சுறுத்தியது. இந்திய அரசின் துணையுடன் நம்மை பேச்சுவாத்தைக்கு அழைத்தனர். 1985 இல் தமிழீழ விடுதலைப் போராட்ட தரப்பிற்கும் சிங்கள அரசிற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் (திம்பு பேச்சுவார்த்தை) சிங்கள அரசு நமது கோரிக்கைகளை அடிப்படையிலேயே நிராகரித்துவிட்டது.

87இல் மீளவும் ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தின் மூலம் யுத்த நிறுத்தம் உருவானது. இச்சந்தர்ப்பத்தில் சிங்கள தேசத்தின் இனவெறி சக்திகள் கொந்தளிக்கத் தொடங்கினர். ஆர்ப்பாட்டக்காரர்களை ஹெலிகொப்டர் மூலம்துப்பாக்கி பிரயோகம் செய்து அடக்கிடுமளவுக்கு இனவெறி எதிர்ப்பலைகள் உக்கிரமாயிருந்தன. இந்த சமாதான முயற்சிக்கு நமது போராட்ட தரப்பும் தேசமும் விதிகளுக்கமைய செயற்பட்டு வந்தாலும், யுத்த நிறுத்தத்தை மீறி இந்திய -சிறிலங்கா அரசுகளின் வஞ்சக செயற்பாட்டினால் அந்த "சமாதான" முயற்சி நமது தேசத்தின் கழுத்துக்கு கத்தியாக வந்திருப்பதை நமது போராளிகளும் மக்களும் கண்டுகொண்டனர்.

மீளவும் 1989 காலப்பகுதியில் பிரேமதாச அரசுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் வந்தனர். தன்னை பெரிதும் நேர்மையானவராக பிரஸ்தாபித்துக் கொண்ட பிரேமதாச, புலிகளின் தலைமையுடன் நேரடி பேச்சுவார்த்தை எனும் கருத்தை அழுத்தி வந்தார். அவ்வாறான தந்திரோபாயத் திட்டத்துடன் போராட்டத்தை அழித்தொழிக்க முயலும் சிங்கள தலைமையின் துரோக நோக்கத்தை புலிகள் புரிந்துகொண்டிருந்ததனால் பிரேமதாசவுடனான உடன்படிக்கை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

சிங்கள அரசியல் தலைமைகளுடன் நமது தேசம் மேற்கொண்ட "பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு"க்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பேச்சுவார்த்தையை பயன்படுத்தி

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள்: 04

# மாணவர்கள்

நவகொலனித்துவ சிறிலங்கா அரசின் கல்விக் கொள்கையால் சிங்கள மற்றும் தமிழ் மொழிவழிக் கல்வி மாணவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படுகின்றனர்.

மாணவர்களின் சுதந்திரமான அறிவுத் தேடலுக்கான தடையற்ற வாய்ப்புகளை இந்த நவகொலனித்துவ கல்விமுறை கொண்டதாயில்லை. கல்வி என்பது அறிவு வளர்ச்சிக்கானதாக இல்லாது முற்றிலும் பொருளாதார வாழ்வுக்கான முதலீடாகக் குறுக்கப்பட்டுள்ளது. யாந்திரீகமானதும், சலிப்பூட்டுவதுமான பாடநெறியின் மூலமாக ஏகாதிபத்திய, நவகொலனித்துவ முறைமைக்கு சேவகம் செய்திடும், அதைப் பாதுகாத்திடும் பிரிவினரை உருவாக்குவதே சிறிலங்கா அரசின் குறிக்கோளாக உள்ளது. இதனால் சுதந்திரமான அறிவுத்தேடல் மிக்க நிபுணத்துவ பிரிவினர்களாக மாணவர்கள் பரிணமிக்க முடியாதுள்ளது.

ஒருவரின் பொருளாதார வாழ்வை, சமூக அந்தஸ்த்தை தீர்மானிக்கும் காரணியாக கல்வி மாற்றப்பட்டுள்ளதால் வணிக சந்தையில் பண்டங்களுக்கு நிலவும் போட்டியைப் போன்றே கல்விச் சந்தையில் பலதரப்பட்ட போட்டிகள் உருவாகியுள்ளன. இந்த கல்விச் சந்தையில் மாணவர்களது மூளையை போட்டிக்குத் தயார் படுத்திடும் வார்ப்புப் பட்டறைகள் போல் உருவாகியிருக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள், ஈவிரக்கமின்றி அவற்றால் அறவிடப்படும் கட்டணத் தொகை, தமது இரத்தத்தை பிழிந்து பிள்ளைகளை படிக்க வைக்கும் பெற்றோரின் கனவுகள்... இவற்றினால் ஓய்வின்மையாலும் அதீத பிரயத்தனத்தாலும் தமது எதிர்காலம் குறித்த அச்சங்களினாலும் மாணவர்கள் தொடர்ச்சியான உளப்பதைப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதைவிட சமூக, பொருளாதார நிலையின் அடிப்படையில் மாணவர்களை தரம்பிரித்துவிடும் பாடசாலைகளின் தராதர முறைமையும் மாணவர்கள் மீது பெரும் சுமையாக அழுத்திக் கொண்டுள்ளது. நகர்ப்புற முதல்தர பாடசாலைகளில் பயிலும் மாணவர்களே சமூகத்தின் அதிகாரமிக்க அடுத்த தலைமுறையாக வரும் வாய்ப்பை கொண்டிருப்பதால் சாதாரண மக்களால் நெருங்க முடியாதளவுக்கு பாடசாலைகளின் தராதர வேறுபாடுகள் கற்பனையாக வளர்த்துவிடப்பட்டுள்ளன. முதல்தர பாடசாலைகளுக்கு அதீத கவனிப்புகள் கிடைக்கப் பெறுவதன் மறுபுறம் பெரும்பாலான மாணவர்கள் பயிலும் சாதாரண பாடசாலைகள் அனைத்துத் தேவைகளிலும் பற்றாக்குறைகளுடன் செயற்பட நேர்ந்துள்ளது.

குறுகிய கால இடைவெளிகளுக்குள் அரசினால் மாற்றப்படும் கல்விக் கொள்கையினால் மாணவர்களின் கற்பதற்கான ஆர்வம் சிதைக்கப்படுகின்றது. அபரிமித செலவினங்களை மாணவர்கள் எதிர்கொள்ள நேர்கிறது. மறுபுறம் இச்செலவினங்களை சமப்படுத்திக் கொள்வதற்கான அரச மானியங்கள், உதவித் தொகைகள், போக்குவரத்து வசதிகள், விடுதி வசதிகள் மாணவர்களுக்கு மிக அரிதாகவே கிடைக்கப்பெறுகின்றன.

இந்த நவகொலனித்துவ கல்விமுறைமையின் நெருக்குதல்களை எதிர்த்து மாணவர்கள் குரல்கொடுத்தால் அரச வன்முறை மாணவர்கள் மீது பிரயோகிக்கப்படுகிறது. இப்படியாக, தமக்கான குறிப்பான அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சனைகளைக் கொண்ட அரசின் அடக்குமுறைக்கு உள்ளாகிவரும் சமூகப் பிரிவினர்களாக மாணவர்கள் உள்ளனர்.

ஈழத் தமிழர் மீது சிங்கள அரசு திட்டமிட்டு மேற்கொண்ட குறிப்பான தேசிய அடக்குமுறையின் ஒரு வடிவமாக 70இன் தமிழ் மாணவர்களுக்கெதிரான கல்வித் தரப்படுத்தல் அமைந்தது. சிறிலங்கா அரசு மாணவர்கள் மீது சுமத்தி வந்த பல்வேறு வடிவிலான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும்



பாதிப்புக்குள்ளாகியிருந்த தமிழ் மாணவர்களால், தம்மீது இனரீதியில் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையை அதற்கு மேலும் சகிக்க முடியாது ஆர்த்துக் கிளர்ந்தனர்.

மாணவருக்கெதிரான தொடர் அடக்குமுறைகளை எதிர்த்து போராளி சிவகுமாரன் தலைமையில் ஆரம்பமான தமிழ் மாணவர் பேரவை தேசம் தழுவிய போராட்டங்களை நடாத்தியது. தமிழ் மாணவர்களின் உரிமைக் குரலுக்கு சிங்கள அரசு கற்பாறையாக அசையாதிருந்தது.

ஆர்ப்பாட்டங்களினால் மாத்திரம் மாணவ சமூகத்தின் உரிமையை வென்றுகொள்ள முடியாதென்பதை தமிழ் மாணவர் பேரவை கண்டு கொண்டது. அது மாத்திரமல்ல, தமிழ் மாணவர்களின் உரிமையென்பது தமிழ் தேசத்தின் விடுதலையுடன் பிணைந்துள்ளது, ஆயுதப் போராட்டத்தின் மூலமே நமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படும் என்பதையும் அவர்கள் அனுபவத்தினால் கற்றுக் கொண்டனர். தாம் வந்தடைந்த அரசியல் புரிதலை அத்துடன் கைவிடாது தாமே தேசத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்தவும் முன்வந்தனர்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்கான ஒரே தீர்வு தனிநாடு அமைவதே, ஆயுதப் போராட்டமே அதற்கான ஒரேவழி என்பதை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து தாயகத்தின் விடுதலைக்காகதம்மை அர்ப்பணித்து, முதல் தலைமறைவு ஆயுதப் போராட்ட அமைப்புச் செயற்பாட்டுக்கு வழிகாட்டியவர்கள், முதல் தலைமறைவு ஆயுதப்போராளிகளாக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள், தேசத்திற்கு தம் இளம் உயிரை அர்ப்பணித்த முதல் தியாகிகள் நம்மரும் மாணவர்களே.

குறிப்பாக, 83இன் இன அடக்குமுறைகளினால் கிளர்ந்தெழுந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் தம்மை நேரடியாக இணைத்துக் கொண்டதன் மூலம் நம் தேசத்தின் விடுதலைப் பயணத்தில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தினார்கள். இன்றுவரையிலும் போராட்டத்திற்கான தொடர்ச்சியான மனிதவளத்தை வழங்கிவரும் பிரதான சமூகப் பிரிவினராக மாணவர்கள் திகழ்கின்றனர். மாணவர்களின் பாத்திரம் நம் தேசத்தின் விடுதலையுடன் மிகவும் உயிரோட்டமான முறையில் பிணைந்துள்ளது.

வரலாற்றில், மாற்றங்களுக்கான முதல் முரசத்தை ஊதிடும் துடிப்பான சமூகப்பிரிவினர்களாக திகழ்ந்து வருபவர்கள் மாணவர்களாவர். அரசின் அடக்குமுறைக்கெதிரான முதலாவது எதிர்ப்புக்குரல் மாணவர்கள் மத்தியிலிருந்துதான் ஒலிக்கிறது. தமிழீழ மாணவர்களின் வரலாறும் உலக மாணவர்களின் பொது வரலாற்றிற்கு நிகரான வீரமிகு வரலாற்றைக் கொண்டதுதாம்.

சிங்கள அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் நமது மாணவர்களின் அடிப்படை உயிர்வாழ்வே இன்று அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. தேசத்தின் எதிர்காலமாகத் திகழும், தேசப் போராட்டத்தின் பிரதான மனிதவள பங்காளிகளாயிருக்கும் மாணவர்களை சிங்கள அரசு பிரதான இலக்கு வைத்து அழித்தொழிக்கிறது. கண் மூடித்தனமான கைதுகள், கடத்தல்கள், சித்திரவதைகள், படுகொலை செய்தல், பாடசாலைகளின் மீது குண்டுவீசி கூட்டாக படுகொலை செய்தல் என சிங்கள அரசின் அழித்தொழிப்புக்கு நமது மாணவர்கள் தொடர்ச்சியாக உள்ளாகின்றனர்.

ஒரு தேசத்தின் வளமான எதிர்காலத்துடன், அத்தேசத்தின் இளம் தலைமுறையின் உயிர்த்துடிப்பான, சுதந்திரமான அறிவுத்துறை செயற்பாடுகள் பிணைந்துள்ளன. சிங்கள அரசோ இத்தகையதொரு எதிர்காலமே நமது தேசத்திற்கு இருக்கக் கூடாது எனும் குரூர சிந்தனையுடன் திட்டமிட்டு நம் மாணவர்களின் கல்வியை சிதைக்கிறது. ஆக்கிரமிப்பு யுத்தத்தினாலும், படைகளின் அட்டூழியங்களினாலும் பாடசாலைகள் சீராக நடைபெறாத நிலைமை 15 ஆண்டுகளாக நீடிக்கிறது. பாடசாலைகள் பல சிங்களப் படைமுகாம்களாகவும், அகதி முகாம்களாகவும் மாறியுள்ளன. நீண்டகால பொருளாதாரத் தடையினால் தேசத்தின் பொருளாதார வாழ்வை முடமாக்கியிருப்பதன் மூலம் மாணவர்களின் அனைத்து அத்தியாவசியத் தேவைகளும் மறுதலிக்கப்படுகின்றன. பட்டினிபோட்டே நம் மாணவக் குழந்தைகளை அரசு கொலை செய்கிறது. போஷாக்கின்மையாலும் பட்டினியாலும் வகுப்பறைகளில் மயங்கிவிழும் அவல நிலைமை நம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவையாவும் நம் மாணவர்களின் வளமான எதிர்காலத்தை அடிப்படையில் பாதிக்கின்றன.

இதற்கெல்லாம் நம் மாணவ சமூகம் அஞ்சியொடுங்கவில்லை. வீரமிகு வரலாற்றைப் படைத்துள்ள தமிழ் மாணவர் பேரவையின் வழிவந்த நம்மாணவர்கள் தம்மாலான அனைத்து வழிகளிலும் சிங்கள அரசை துணிகரமாக எதிர்த்து நிற்கின்றனர். மாணவ சமூகத்தினதும், தமிழ் மக்களினதும் உரிமைகளுக்காக சிங்களப் படைகளை எதிர்த்து

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிரடிப்படையின் முற்றுகைக்குள் தென்தமிழீழம்

மட்டக்களப்பு நகர்ப்புற மக்களுக்கு சிறிலங்கா அதிரடிப்படையினர் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளனர். விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் மக்களையும் சமாதானம், யுத்தநிறுத்தம்கோரி அழைப்புவிடுப்பவர்களையும் அழித்தொழிக்கப் போவதாக அவர்கள் பிரகடனம் செய்துள்ளனர். அரசபயங்கரவாதம் வெளிப்படையாகவே தன் அழித்தொழிப்புகளை தொடங்கிவிட்டதற்கான எச்சரிக்கையாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். வட தமிழீழத்தில் இருந்து ஆரம்பித்து, மத்திய தமிழீழத்தின் தலைநகராகிய திருமலையைக் கடந்து தற்போது தென்தமிழீத்தினையும் புதைகுழி மேடுகளாக்குவதற்கான ஆரம்ப தயாரிப்பில் ஈடுபடுவதற்கான் ஏகமனதான ஆசிகளை அதிரடிப்படைகள் சிங்கள அரசுத்தலைவர்களிடம் பெற்றுக் கொண்டுள்ளது.

கடந்த தேர்தலில் நமது விடுதலைப்போராட்டத்தை நிர்மூலம்செய்யும் ஆணையை சிங்கள தேசத்திடம் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள சிங்கள அரசுத்தலைவர்கள், அழித்தொழிப்பினையே இலக்கென போரைப்பிரகடனம் செய்தனர். இதன் ஒருபகுதியாக, அண்மையில் மட்டக்களப்பு நகர்ப்புறத்தின் “பாதுகாப்பு” கடமைகள் இராணுவத்தின் வசம் இருந்து அதிரடிப்படையினரின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆரம்பத்தில் அரசு எதிர்ப்புத் தன்மையுடன் மாத்திரம் காணப்பட்ட வெகுசனப் போராட்டங்கள் தற்போது நேரடியாக விடுதலைப் போராட்டத்தினைப் பலப்படுத்தும் பண்பை வெளிப்படுத்தி வருகின்றது. பகிரங்கமாயும், இரகசியமாயும் மக்கள் அமைப்புகள் தம்மை அணிதிரட்டி வருகின்றமை ஆக்கிரமிப்பாளர்களுக்கு கிலியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிகழ்வுகளுக்கும் ஆக்கிரமிப்பு பணிகள்இராணுவத்திடம் இருந்து அதிரடிப்படையினர் வசம் ஒப்படைக்கப்பட்டதற்கும் நெருங்கிய தொடர்புள்ளது.

அதிரடிப்படையானது, இராணுவத்தை விடவும் போராட்டங்களை நசுக்குவதற்கு விசேடபயிற்சியளிக்கப்பட்ட பிரிவாகும். இதற்கென பல வளங்களையும்வாய்ப்புகளையும் அரசு ஒதுக்கிக் கொடுத்துள்ளது, இவர்கள் நேரடி அடக்குமுறைகளை மாத்திரம் அல்ல, பல்வேறு சூழ்ச்சிகளிலும் ஈடுபடுவர். மக்களை மக்களுக்கு எதிராக தூண்டிவிடுவது, சமூகங்களுக்கிடையில்பிளவுகளை ஏற்படுத்துவது போன்றவற்றையும்மிகத்திட்டமிட்டு செய்வர்.

எண்பதுகளின் நடுப்பகுதியையும், தொண்ணூறுகளின் தொடக்கத்தையும் நாம் நினைவு கூர்வோம் எனின் இந்த அதிரடிப்படையினரின் மனித வேட்டைகளின் கொடுரம் நம் நெஞ்சைப் பிழிந்தெடுக்கத் தக்கதாகும். நமது இளம்தலைமுறையினர் நூற்றுக் கணக்கில் கைதுசெய்யப்பட்டு, அதிரடிப்படை வதைமுகாம்களில் துவம்சம் செய்யப்பட்டனர். உடலுறுப்புகள் சிதைக்கப்பட்டு உயிர்கள் பிடுங்கப்பட்டு, வதைமுகாம்களின் பின்புறம் தொட்டிகளில் டயர்கள் போட்டு, கொல்லப்பட்டவர்களையும் அல்லது பாதி உயிருடன் உள்ளவர்களையும் எம்மவர்களைக் கொண்டே எரித்த கொடுமைகள் ஏராளம். இன்று, விடுதலைப்போராட்டத்தின் இறுதி இலக்கு அண்மிக்கும்போது, அரசு நமது சமூகத்தின் ஆற்றல் மிக்க பிரிவினரை தேர்ந்தெடுத்து அழிப்பதில் குறிப்பான கவனத்தை செலுத்தும். இவ்வாறாக தீவிர அழிவு வேலைகளை செய்வதற்கான பொறுப்புகளே அதிரடிப்படையினிரடம் இன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பாக கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.



மறுபடியும் இந்த கொடிய சகாப்தத்தை தொடக்கி வைக்கும்எச்சரிக்கையினையே தற்போது சிறிலங்கா அதிரப்படைகளால் விடுக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்வதும் முறியடிப்பதும் நம் தேசத்திலுள்ள அனைத்துசக்திகளதும்கடமையாகும். முன்னெச்சரிக்கை, விழிப்புணர்வு, பகிரங்கப்படுத்தல், சர்வதேச மயப்படுத்தல் என்பவற்றில்திட்டமிட்டு நமது சக்திகளை திரட்டிஈடுபடுவது நமது கடமையாகும். முன்னனுபவம் கொண்டோர், தற்போது அமைப்பாகி வரும் தமிழ் மற்றும் முற்போக்கு எண்ணம் கொண்ட தொடர்பு சாதன பிரிவினர், ஊர்ப்பொது மன்றங்கள், கண்காணிப்புக்குழுக்கள், சட்டத்துறையிலுள்ளவர்கள், வைத்தியத்துறையினர், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களிலுள்ளோர் கூட்டிணைந்தும் பரஸ்பரம் ஒத்துழைத்தும் தீவிர தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஒப்பீட்டளவில் வடதமிழீழத்தில் இழைக்கப்படும் அரசபயங்கரவாதம் அம்பலப்பலப்படுத்தப்படும் அளவிற்கு தென்தமிழீழத்தில்நடைபெறுவதில்லை என்பதை விசேட கவனத்தில்எடுத்து அனைவரும் இக் கடமைகளை நிறைவேற்றுவோம்.

கடந்த காலங்களில் எத்தனை கொடுமைகளை எதிரிகள் புரிந்த போதிலும் எதிரிகளால் மக்கள் எழுச்சிகளை மழுங்கடிக்க முடியாது போயிற்று. எது வெளிப்படக்கூடாதென இதுவரை ஆக்கிரமிப்பாளர்கள் விளிப்பாக இருந்தார்களோ, அந்த மக்களின் போராட்ட உணர்வானது அனைத்து அடக்குமுறைகளையும்மீறி இப்போதும்உத்வேகமடைந்து, போராட்டத்தின் போக்கைப் பலப்படுத்தியே வருகின்றது. நமது இறுதி வெற்றியானது விடுதலையிலும் நமது பாதுகாப்பை நமது சொந்தக்கைகளில் எடுப்பதிலுமேதங்கியுள்ளது. இருந்தும், இழப்புக்களை குறைப்பதிலும் எதிரிகளின் கொடுமைகளை உலக மனசாட்சியின் முன்நிறுத்துவதிலும் விரைந்து திட்டமிட்டும் முன்கையெடுத்தும் செயற்படுவோம்.

- அனஞ்சயன்



## நெற்றி மண்

எங்கள் மண்ணின் சுதந்திரப் பண்ணைப்
பாடவிடு!
எங்களின் இனிய நாட்களை
வாழவிடு!

எங்கள் குரல் வளையை ஏன்
ஏறி மிதிக்கின்றாா்:
நேற்றென் தம்பி கிறுக்கிய
ஏடுகளைக் கிழித்தாய்:
என்னுயிர்த் தங்கை நல்லாள்
இனிய வீணையின் வடிவை
வேகும் வெயிலில் புழுதியில்
வீசி எறிந்தாய்:
அட வேட்டைக்காடா
உனக்கெம் தேசமடா
வீரம் விளைக்கும் விடுதலை
வளர்க்கும் பூமியடா!

எங்கள் முன்றலில் மலர்ந்த
பூக்களின்
புன்னகையைப் பறித்தாய்:
வாசம் ஏந்திய தென்றலிலே
வெடி மருந்தின் நெடி கலந்தாய்:
குடிசைகளை எரித்தாய்:
கோடரியால் உயிர் பிளந்தாய்:
குண்டுகள் வீசியெம்
தேசத்தையே கிழித்தாய்:
கிழிந்து போவோமா?
உறுதி குலைந்து போவோமா?
எரிந்த சாம்பலிலிருந்தும்
மீண்டெழும்
விடுதலைப் பறவையடா!
நாங்கள் விடுதலைப்
பறவையடா!

-சு.வில்வரத்தினம்
வைகாசி 1990

**நன்றி: நெற்றிமண்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆக்கிரமிப்பின் குறியீடுகள்:

எந்தவொரு ஆக்கிரமிப்பாளரும் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள் மீதும் அவர்களின் மண் மீதும் ஆதிக்கத்தினை வெளிப்படுத்தும்பல்வேறு வடிவங்களையும் குறியீடுகளையும் தொடர்ச்சியாக நிலைப்படுத்திக் கொண்டிருப்பர். மக்கள் மீளமுடியா அடிமைத்தனத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பதையும் எதிர்ப்புகள் இன்றி அடக்கிவைக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், ஆக்கிரமிப்பாளர்களின் கருணை கிடைத்தால் அன்றி இந்த நிலையில்இருந்து தமக்கு மீட்சிக்கு வழி கிடையாது என்ற சிந்தனையிலும் செயல்முடக்க நிலையிலும் மக்களை வைத்திருக்க முனைவதும்,இதனூடாக ஆக்கிரமிப்பின்பிரதான இலக்குகளை அடைந்து கொள்வதை இலகுவாக்கிக்கொள்வது எதிரிகளின் நோக்கமாகும்.

தமிழீழத்தில் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் சிறிலங்கா படைகள் நீண்டகாலமாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இதனையே சுட்டிநிற்கின்றன. எதிரிகள் தமது அடையாளங்களை எமது மண்ணில் பதிப்பது, எமது பண்பாட்டு, கலாச்சார வாழ்வியல் அடையாளங்களை சிதைப்பது. பொருளாதார தடைபோன்ற கூட்டுத்தண்டனைகள் விதிப்பது என நம்மீது ஆக்கிரமிப்பின் அடையாளங்கள் விரிந்து செல்கின்றன.

வீதிக்கு வீதி தடையரண்கள் அமைத்திருப்பதும், மக்களை ஏற்றி இறக்குவதும், மக்களின் நடமாடும் சுதந்திரத்தை பாஸ் நடைமுறை கொண்டு தடைசெய்வதும், சொந்த மண்ணிலேயே நமது மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள், பதிவுகளும் என கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சிறிலங்கா படைகள் நம் மீது ஆக்கிரமிப்பின் சின்னங்களை பொறித்துவருகின்றது.

அண்மைக்காலங்களில் இந்நடைமுறைகள் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளன. மட்டுநகரின் மையப்பகுதிவாழ் மக்கள் ஞாயிறு தோறும் படை முகாம்களுக்கு வந்து கையொப்பம் இட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். வெளியூர் பயணங்களை படையினர் கட்டுப்படுத்துகின்றனர். இராணுவ முகாம் கடமைகளில் நமது மக்களை ஈடுபடுத்துகின்றனர். வீதியோரங்களில் உள்ள மதில்கள், வேலிகளை தகர்த்து தமது ஆக்கிரமின் அடையாளமாக்குகின்றனர். மரங்களைச் சாய்க்கின்றனர். பொதுக்கட்டடங்களையும் பாடசாலைகளையும் ஆக்கிரமிக்கின்றனர். தகர்த்து தரைமட்டமாக்குகின்றனர்.



தமிழீழத்திலுள்ள மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை செய்வதற்கு ஏகப்பட்ட தடைகளை விதித்துள்ளனர். உள்ளாடைகளுடன் மட்டும் சென்று யாழ் கடலேரியில் மீன்பிடிக்க வேண்டும் என நம்மை அவமானப்படுத்துகின்றனர். ஆறு மணிநேரம் மீன்பிடிப்பதற்கு 12 மணித்தியாலங்கள் அங்குமிங்குமாக மீனவர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். இப்படியாக ஆக்கிரமிப்பினைக் காட்டும் குறியீடுகள் அதிகரித்து வருகின்றன.

ஈழத்தமிழர் மீது திணிக்கப்பட்டு பெற்ற அனுபவங்களை, ஆக்கிரமிப்பின் அடையாளச் சின்னங்களை தற்போது மலையகத்திலும் சிங்களப்படையினர் பதிக்கத்தொடங்கியுள்ளனர். தோட்டங்களில் பொலீஸ் காவல் அரண்கள் அமைக்கப்படுகின்றன. விசேட அடையாள அட்டை நடைமுறைகளும், குடும்பத்திலுள்ள அனைவரும் தமது புகைப்படங்களை பதிவு ஆவணங்களில் இணைத்திருக்க வேண்டும் என்பது போன்ற நடைமுறைகளை திணிக்கின்றனர். ஆட்களைக் கண்டபடி கைது செய்து அடைப்பதும் அதிகரித்து வருகின்றது.

ஆக்கிரமிப்புக் கொடுமையின் கீழ், நமது மக்களை இருத்தி இவ்வாறு நசுக்குவதும் வதைப்பதும் உண்மையில், எதிரிகள் எதிர்பார்ப்பது போன்று அவர்களின் ஆக்கிரமிப்புக்குச் சாதகமான விளைவுகளை தருவதில்லை. ஒரு சமயம் குறுகிய காலம் எதிரிகள் வெற்றியடைந்தது போல தோற்றம் இருந்தாலும், நீண்ட காலத்தில் மக்களின் எதிர்ப்புணர்வுகளையும், போர்க்குணாம்சங்களையும் இது அதிகரிகச் செய்கின்றது. எதிரிகளின் மீது ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கூர்மைகொள்ளச் செய்கின்றது. குமுறியெழுந்த மக்கள், கப்பல் போக்குவரத்து நிர்வாகத்தினர் மீது நடாத்திய தாக்குதல் அண்மைக்கால உதாரணமாகும்.

இவ்வாறான எழுச்சிகள் இறுதியில் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களாகி முழுவீச்சத்துடன் நடைபெறவும், இறுதியில் எதிரிகள் தமது மூட்டைமுடிச்சுகளுடன் ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்படும் இறுதி வெற்றிக்கும் இட்டுச் செல்கின்றது. ஆக, ஆக்கிரமிப்பாளர்கள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளவென மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் முடிவில் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கான படிக்கற்களாகவே மாறுகின்றன. போராட்டதின் பலத்தில்எதிரிகளின் ஆயுதத்தளபாடங்களும் கூட பறித்தெடுக்கப்பட்டு எதிரிகளுக்கு எதிராக அண்மைக்காலங்களில் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. எதிரிகளால் தற்போது வாங்கிக் குவிக்கப்பட்டுள்ள படைக்கலங்களுக்கும் கூட விரைவில் இதுவேதான் கதியாகும். - விஜி

## விடுதலைக்கு அறைகூவும்

(1ஆம் பக்கத்தொடர்)

கொண்ட ஒரே குரலாக வெளிப்பட்டு நமது விடுதலைப் போராட்டத்தில் இன்னுமின்னும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என விளைகின்றோம். அதாவது அது கிழக்குப்பல்கலைக்கழகத்தின் மாணர்வர்களின் குரலுடன் இணைய வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் கல்விக்கல்லூரி மாணர்வகளின் குரல்களுடன் பின்னிப்பிணைந்து வலுவடைய வேண்டும். அதுமட்டுமல்ல, முழு ஈழத்தமிழ் மாணவர்களின் ஒன்றிணைந்த குரலாகி தமக்குள் தனித்துவமாயும் அதேசமயம் பொதுவான தேசியக்குரலாகவும் நமது மக்களின் விடுதலைக் குரலாக ஓங்கியொலிக்க வேண்டும் என்பதே நமது தேசத்தின் பெருவிருப்பாகும்.

இத் திசையில் நமது மாணவர் சமுதாயம் பலமானதும் ஒரு குரல் கொண்டதுமான ஒரு தாபன வடிவம் பெறும் போது, அதன் பலமும் தற்காப்புத்திறனும் பன்மடங்காகும். மாணவர்சமூகத்தன் இத்தாபனமானது பலமிக்க அரணாக நின்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பாதுகாத்துப் பலப்படுத்தும். மிருசுவிலிலும் இன்னும் நம் தாயகமெங்குகிலும் அரசபயங்கரவாதம் கொன்றுகுவித்து இரத்தவெறி தீர்த்துப் புதைத்த நமது மக்களின் குருதிக்களிம்பில் இதற்கானசபதம் எடுத்துக்கொள்வோம். விட்டுக்கொட மாட்டோம் நமது மண்ணில் ஆக்கிரமிப்பாளர்களின் ஒரு அடிச்சுவடுகூட எஞ்சிக்கிடக்க அனுமதிக்கமாட்டோம் என சபதம் செய்திடுவோம்.

இறுதி ஆய்வில் நமது தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் உன்னத வெற்றியானது பரந்துபட்ட மக்கள் சக்தியின் உருக்குப்போன்ற உறுதியிலும் போராட்ட வலிமையில் தங்கியுள்ளது என்பதை நமது விடுதலைப்போராட்ட வரலாற்றிலும் மீள்உறுதி செய்திடுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நம் தேசமும்..

(2ஆம் பக்கத்தொடர்)

நவீன யுகத்தில் குறுகிய காலத்துள் தீவிரமாக உருவாகிவிடுகின்றன. அத்தனை வேகமாக இன்று வரலாற்று நிகழ்வுகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த உண்மை மலையக, முஸ்லீம் தேசங்களுக்கும் தென்னாசியாவில்தேசிய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கும் அனைத்து அரசியல் சமூகங்களுக்கும் பொருந்தும். எனவே, தனது அரசியல் சுயநிர்ணய உரிமைக்காக போராடும் ஒரு மக்கள் சமூகத்தின்தேசிய உரிமைகள்குறித்துவரலாற்றுபூர்வமான சான்றுகளையும், காரணங்களையும் துருவிக் கொண்டிருப்பதும், பூர்வீகங்களைத் தேடி வருடங்களை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருப்பதும் நடப்பிலுள்ள இரத்தம் சொட்டும் தேசிய அடக்குமுறைகளுக்கு துணைபோவது தவிர வேறென்ன?

ஆயிரம் வருடங்களுக்கு மேலாக, அந்நிய ஆதிக்கத்தற்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் அயர்லாந்து மக்கள் இன்னமும் முழுமையான விடுதலையைப்பெற முடியாத நிலையில் இருக்கலாம். அதேசமயம்பல்வேறு சிக்கலான காரணிகளின்திரட்சியாக கண்மூடிததிறப்பதற்குள் ஒரு தேசிய உருவாக்கம் நடைபெற்று தனக்கேயுரிய இறைமையின்பாட்பட்டு, தேசிய அரசொன்று புதிதாக உருவாகிடவும் முடியும் என்பதற்கு வரலாற்றுசான்றுகள்அனேகம்உள்ளன. ஒருதேசியசமூகம் நீண்டகாலமாக இன்னுமொரு அரசுக்கட்டமைப்பினுள் பலவந்தமாக வைக்கப்பட்டிருந்தது என்பதற்காக, அதற்கேயுரிய இறைமை அற்றுவிடுவதில்லை. இதுவரை நீறுபூத்துக்கிடந்த தமிழ்தேசச்தின் இறைமையானது இன்று கொழுந்து விட்டெரிகின்றது. இத்தீப்பிழம்பை அணைக்க முயலும் எல்லாவகையான முயற்சிகளையும் அரசியல் சதிகளையும்ஒன்றிணைந்து முறியடிப்போம்.

-தருமு

(மாணவர்கள்.. 4ம் பக்கத் தொடர்ச்சி)

பகிரங்க ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அசைக்கமுடியா வெகுஜனத் திரளின் முன்னால் சிங்களப் படைகள் பணிந்து போக வேண்டி ஏற்பட்ட (பளை மக்கள் விடுவிப்பு என...) சம்பவங்கள் மாணவர் போராட்டங்களின் வெற்றிக்கு சான்றாகும். மாணவர்களின் இந்த வெகுஜன தளத்திலான போராட்டங்களால் சர்வதேச அளவில் சிங்கள அரசு பல கேள்விகளுக்கும் முகங்கொடுக்க நேர்கிறது.

பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், சுதந்திர மாணவர் அமைப்பு என அமைப்பு வடிவங் கொண்டு தமதும் தேசத்தினதும் உரிமைக்காக மாணவர்கள் கிளர்ந்தெழுவது, சிங்கள அரசின் அடக்குமுறை களையெல்லாம் மேவி நிற்கும் மாணவர்களின் உயிரோட்டமான போர்க்குணாம்சத்தையே காட்டுகிறது.

கடந்தகாலங்களில், போராட்ட அமைப்புகள் அனைத்துமே மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளையும், அரசியல் உரிமைகளையும் தேசப்போராட்டத்தின் பெயரால் அத்துமீறின. மாணவர்களின் தனித்துவம் நசுக்கப்பட்டது. மாணவர்களது அரசியல் மற்றும் தனித்துவத்திற்காக குரல்கொடுத்த மாணவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகினர். படுகொலை செய்யப்பட்டனர். மாணவர்களின் தனித்துவ அடையாளம் தேச அரசியலில் இல்லாதொழிக்கப்பட்ட நிலைமை பத்தாண்டுகளுக்கு மேலாக நீடித்தது. தற்பொழுது மீளவும் மாணவர்களின் சுதந்திர அரசியல் நடவடிக்கைகள் அரங்கிற்கு வருகின்றன. இதை தேசமாக அனைவரும் ஆதரித்துப் பலப்படுத்த வேண்டும்.

நமது மாணவர்களின் சுதந்திரமான அறிவுச் செயற்பாடும் அரசியல் செயற்பாடும் இணைந்த சுபிட்சமான வாழ்வு தேச விடுதலையுடன் ஒன்றரப்பிணைந்துள்ளது.

சிங்கள அரசினால் மூன்று தசாப்தங்களாக திட்டமிட்டு சிதைக்கப்பட்டுவரும் நமது மாணவர்களின் சமூக மற்றும் அறிவுத்தள வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்விதமான சூழலையும் கல்வித்திட்டங்களையும் ஏற்படுத்துவதாகவும், மாணவர்களின் தனித்துவமான அரசியல் உரிமைகளை பாதுகாப்பதாகவும் தமிழீழ குடியரசு அமைய வேண்டும். சுதந்திரமான அறிவுச்செயற்பாட்டை, தொழில் நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வித்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இதுவே நமது மாணவர்களின் இதுவரைகால ஈடிணையற்ற அர்ப்பணிப்புகளுக்கும் சிந்திய இரத்தத்திற்கும் உயிர்த்தியாகங்களுக்குமான ஒரே தீர்வாகும்.

-அங்கவை

## மக்கள் களம்

அன்புடையீர், தமிழீழம் பத்திரிகையின் அனைத்து இதழ்களையும் கிரமமாக வாசித்து வருகிறேன். தமிழீழம் 21இல் மக்கள் களம் பகுதியில் உமர் என்பவரால் எழுதப்பட்டிருந்த தகவல் சார்ந்து உண்மை நிலையை தங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன். விடுதலைப் புலிகள் மூதூரில் வறிய முஸ்லிம் மக்களை கடத்திச் சென்று பலவந்தமாக இரத்தம் பெற்றதாக அத்தகவல் கூறுகிறது. இக்குறிப்பான தகவலானது உண்மையல்ல என்பதை தெரிவிக்கிறேன். விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் பலவாறும் பாதிப்புகளுக்குள்ளாகி வருகிறார்களாயினும் பலவந்தமாக முஸ்லிம்களிடம் இரத்தம் பெற்ற சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. உறுதிப்படுத்தப்படாத தகவல்களை வெளியிடுவது உண்மைகளைக் கூட சந்தேகிக்க வைக்கும்.

அன்புடன்

இம்தியாஸ்- மூதூர்

02.01. 01

## சிங்கள தேசத்துடன்...

(3ஆம் பக்கத்தொடர்)

நமது போராட்டத்தை நசுக்குவதில்தான் சிங்கள அரசு குறியாக இருந்து வந்திருக்கிறதேயன்றி, “நீதியான அரசியல் தீர்வுடன் கூடிய சமாதானம்” எனும் எண்ணமே அதற்கில்லை என்பதை இந்த 18 வருடகால அனுபவங்கள் நமக்கு துல்லியமாக நிரூபித்துள்ளன.

1994இல் மிகுந்த நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் நமது மக்கள் சந்திரிகா அரசின் சமாதான முன்மொழிவை வரவேற்றனர். ஆனால் சந்திரிகா நம்பிக்கை தரும் சமிக்ஞைகள் எதையும் வெளிப்படுத்ததாததுடன், “சமாதானத்திற்கான யுத்தம்” “பயங்கரவாதத்திற்கு எதிரான போர்” எனும் பதாகையில் சிங்கள தேசத்தை ஓரணி திரட்டினார். சிங்கள தேசதத்தின் ஏகோபித்த ஆதரவுடன் பெரும் ஆக்கிரமிப்பு படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. நமது அதுவரைகால போராட்ட வரலாற்றில் நமது தேசம் கண்டிராத அழிவுகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டோம்.

இம்முறை, சந்திரிகா அரசின் 5வருட இரத்தப் பசிக்கு முடிவுகட்ட நமது தேசம் தானே முன்வந்து சமாதானத்திற்கு அறைகூவல் விடுத்திருப்பதுடன், நல்லெண்ண சமிக்ஞையாக யுத்த நிறுத்தத்தையும் அறிவித்திருக்கிறது.. ஆனால், யுத்த விதிமுறைகளைக் கூட அடிப்படையில் அறிந்திராத சிங்கள அரசு அவமானகரமான ஒருதலைபட்ச அழித்தொழிப்பு போரை எம்மீது மேற்கொண்டு வருகிறது. நமது பிள்ளைகளை பலிகொண்டு களிப்புறுகிறது.....

அரசியல் பேச்சுவார்த்தைக்கான பரஸ்பர கருத்துப்பரிமாறல்கள் நடைபெரும் தறுவாயில் சிறிலங்கா பிரதமரோ, “பயங்கரவாதத்தை முற்றாக அழித்தொழிப்போம” என்கிறார். அரசுத் தலைவி சந்திரிகா தனது புத்தாண்டு உரையில் “பயங்கரவாதத்திற்கு எதிரான போரை கைவிடமாட்டோம” என்கிறார். பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, “புலிகள் யுத்த நிறுத்தம் செய்திருப்பது தம்மை மீள தகவமைக்கவே” எனக்கூறி எமது நல்லெண்ண முயற்சியை அடிப்படையிலேயே அவமதிக்கிறார்.

நமது தேசம் தானே முன்வந்து சமாதான முயற்சிகளுக்கு வழிகளைத் திறந்திருந்தும் கூட, அதை முற்றிலும் நிராகரித்திடும் இந்த சிங்கள அரசியல் தலைமைகள் சமாதான முயற்சிகளை சிதைப்பதிலேயே குறியாக உள்ளனர்.

சிங்கள பாசிச சக்திகளின் செயற்பாடுகள் விரிவாக்கம் பெறுவதும், வெகுஜனத் தளத்தில் இவர்களது செல்வாக்கு அதிகரித்துவருவதுமானது சிங்கள தேசத்துடன் நமது தேசியப் பிரச்சினைக்கான தீர்வை சமாதான வழியில் அடைவதை சாத்தியமற்றதாக்கிவருகின்றன.

சிங்களதேசத்தினுள்ளும் பாசிசக் கூறுகள் வளர்ந்து வருவதை அண்மைய பிந்தனுவே படுகொலைச் சம்பவமும், தொடர் நிகழ்வுகளும் அப்பட்டமாக வெளிப்படுத்திநிற்கின்றன.

ஆயிரக்கணக்கில் தமது புதல்வர்களை யுத்தத்தில் இழந்திருந்தும், பலர் அங்கவீனமுற்ற நிலையிலும், பல்லாயிரக்கணக்கானோர் போர்முனையில் தம்முயிருக்கு உத்தரவாதமற்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையிலும் கூட சிங்கள தேசம், தமிழரின் போராட்டத்தை முற்றிலும் அழித்தொழித்து தமது தேசிய பெருமிதத்தை நிலைநாட்டிட வேண்டுமென்பதிலேயே அவாக்கொண்டுள்ளது.

“கருத்துக்கள் மக்களை பற்றிக்கொண்டால் அதுவே மாபெரும் சக்தியாக உருப்பெரும்” என்கிறார் மார்க்ஸ். இது புரட்சிக்கும் பொருந்தும், பாசிசத்திற்கும் பொருந்தும். இன்று சிங்கள தேசத்தை இயக்கும் மாபெரும் சக்தியாக இனவெறி சித்தாந்தம் உள்ளது. சித்தாந்தம் அத்தனை இலகுவில் மாற்றமடையக் கூடியதல்ல. தனக்குத்தானே சிங்கள தேசம் இட்டுக் கொண்டுள்ள இந்த விலங்கை, தனது கழுத்தில் தானே தொங்கவிட்டுக் கொண்டுள்ள கற்பாறையை அத்தனை இலகுவில் அதனால் அகற்றிட முடியாது. தமிழீழ தனியரசு அமைவது, மலையக, முஸ்லிம் தேசங்கள் தமது தேசிய உரிமைகளை வென்றுகொள்வது யாவும் சிங்கள இனவெறியை தோல்வியுறச் செய்யும், அதன் இறுமாப்பைத் தகர்க்கும் வலிமைமிக்க ஆயுதங்களாகும்.

அவ்வகையில் நமது போராட்டங்களும் வெற்றிகளும் தான் சிங்கள தேசத்தை, அதை உள்ளூர அழித்துவரும் பிற்போக்கு சித்தாந்த பிடியிலிருந்து மீட்டெடுக்கப்போகும் வரலாற்று சக்தியாகும்.

-சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org


## தேசத்தின் கோரிக்கைகளும் நமது கடமைகளும்!

அன்பார்ந்த தமிழீழ மக்களே,

யுத்த நெருப்பின் மத்தியிலும் இறுதித்துளி வியர்வையையும் பிழிந்து நமக்கு உணவூட்டும் உழைப்பாள மக்களான உழவர்களின் தைத்திருநாள் நல்வாழ்த்துக்களுடன் இப்புத்தாண்டில் தங்களை சந்திக்கிறோம்.

நமது தேசவிடுதலைப் போரில் இதுவரை காலமும் படிப்படியாக ஈட்டப்பெற்றுவந்த இராணுவ வெற்றிகள் மற்றும் அண்மைய பாரிய வெற்றிகரமான போர்முனைத்திருப்பங்களுடன் நமது தேசப்போராட்டம் தனக்கான அரசியல் தளத்தை பலத்துடன் ஸ்தாபித்து நிற்கின்றது.

கடந்த காலங்களில் அரசியல்ரீதியாக எமது போராட்டத்தை வளர்த்தெடுப்பதிலும், வெகுஜனத்தளத்தில் தனித்துவத்துடனான அரசியற்செயற்பாடுகளை ஊக்குவிப்பதிலும் குறைபாடுகளைக் கொண்டிருந்த எமது போராட்டம் இன்று வந்தடைந்துள்ள புதிய நிலைமைகளில் எம்மைத் தேசமாகப் பலப்படுத்திக் கொள்வதற்கு ஆற்றவேண்டிய அரசியல் ரீதியான செயற்பாடுகளை உடனடியாக வேண்டி நிற்கின்றது.

விடுதலைப்போராட்டம் சார்ந்து எமக்குள் நிலவிவரும் பல்வேறு அரசியல் முரண்பாடுகளையும், புதிய நிலமைகளில் தேச நலன்சார்ந்து பிரதான, உடனடி இலக்குளையும் எமது தேசத்தின் மீதான புறவயமான மதிப்பீடுகளில் இருந்து கணித்தக் கொள்வதும் அதன் பாற்பட்டு முதன்மை, பிரதான இலக்குகளை நோக்கி எமது செயல்பாடுகளைகுவித்து பலப்படுத்த வேண்டியதுஎம்மவர் அனைவரினதும்இன்றைய கடமையாகின்றது. மக்களின் எழுச்சிகளையும், போராட்ட வடிவங்களையும் எதிர்புரட்சிகரச் சக்திகளால் ஒரு போதும் நசுக்க முடியாதது என்பது எமக்கும் பொது எதிரிக்குமிடையில் எவ்வளவு நிதர்சனமான அனுபவமோ அதுவே நாம் கொண்டிருக்கும்பல்வேறு அரசியல் முரண்பாடுகளுக்கான தீர்வின் அடிப்படையென நம்புவோமெனில் இன்றைய நிலையில் விடயங்களை ஒழுங்குபடுத்தி முதன்மையானதை தீவிரப்படுத்துவோம்.

தொடர் இராணுவத் தோல்விகளால் நிலை குலைந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சர்வதேசங்களிடம் கையேந்தி நிற்கும் சிறிலங்கா அரசினை சர்வதேச அரங்கிலும் அம்பலப்படுத்தி, எமது போராட்டத்தை மேலும் பலப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஒன்றில் எமது தேசம் நிற்கின்றது. இப்புதிய நிலைமைகள் பன்முகப்போராட்ட வடிவங்களுக்கான அவசியத்தைக் கோரிநிற்கின்றது.

தேசம் பெற்றுள்ள அரசியல் வெற்றிகளை பாதுகாக்கவும், பலப்படுத்தி நமது உடனடி இலக்கை வென்றுகொள்ளவும் தேசத்தினது பொதுவானதும் குறிப்பானதுமான நிகழ்ச்சிநிரலின் கீழ் பன்முகப்போராட்ட வடிவங்களுடன் சமுக சக்திகள் அரங்கிற்கு வருவது அவசியமானதாகின்றது. தேசத்தின் சமுக சக்திகள் தமது தனித்துவத்துடன் பொதுவான நிகழ்ச்சிநிரலில் தேசத்தைப்பலப்படுத்த ஆக்கபூர்வமான, வினைதிறன்மிக்க செயல்பாடுகளை தொடர்ச்சியாக செய்தாகவேண்டும்.

தேசத்தினுள் கனிசமான போராட்டங்கள் இயல்பாகவே மக்களின் பங்கபற்றுதலுடன் மக்களாலேயே ஆரம்பிக்கப்பட்டு தொடர்சசியாக நடைபெற்றுவருகின்றன. எமது மக்கள் மிகத்தீரத்துடன் எதிரியின் முன் தமது ஆர்ப்பாட்டங்களையும் எழுச்சிகளையும் நடாத்துகின்றார்கள். இதனை மேலும் பலப்படுத்ததுவதற்கு எமது தரப்பில் கட்சிகள், அமைப்புக்கள், வெகுசனதாபனங்கள் முழுவீச்சுடன் செயல்பட்டாகவேண்டும். எதிரியினால் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப்பிரச்சினைகள் அரசியல் தளத்திற்கு உயர்த்தப்பட்டு பரந்தபோராட்டங்களாக மாற்றப்படவேண்டும்.

சகதேசங்கள்தொடர்பான நாம்கொண்டிருக்கும்நிலைப்பாடுகளும், அணுகுமுறைகளும் இன்றுவரையில் தமிழ்தேசப்போராட்டத்தில் எதிர்மறை விளைவுகளையே உருவாக்கிவருகின்றன. சகதேசங்கள்பற்றிய எமது கரிசனையானது எமது போராட்டத்தை பலப்படுத்துமெனும் தேசிய சுயநலத்தடன் இருந்தல்லாமல் அத்தேசங்களின் இறைமை சார்ந்து சகதேசங்களின் அரசியல் சமத்துவ உறவுகளின் அடிப்படையில் அமைவதாக இருக்க வேண்டும். அவ்வகை பரஸ்பர பலப்படுத்தலுக்கான பகிரங்கச்செயல்பாடுகளை விடுதலைப்புலிகள் தொடக்கம் சக அமைப்புகளும், கட்சிகளும் செய்தாகவேண்டும்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுடன் எமது போராட்டம் இன்று என்றுமில்லாதவாறு சர்வதேசத்தின் அக்கறைக்குரியதொன்றாக சர்வதேச அரங்கிற்கு கொண்டுசெல்லப்பட வைக்கப்பட்டுள்ளது. இத்தலையீடுகள் எமது தேசத்தின் நலனை எவ்வளவு அக்கறையுடன் பார்க்கின்றது என்பதை நாம் புரிகின்ற போதிலும் சர்வதேச சமுகங்களின் மத்தியில் எமது போராட்டத்தை பலப்படுத்தவதற்கான சந்தர்ப்பமாக இதை உருவாக்குவோம்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் கணிசமான பாத்திரத்தை ஆற்றிவரும்புலம்பெயர்வாழ் தமிழீழ மக்கள் இச்சந்தர்ப்பத்தினை அதி உச்ச பயன்பாட்டைத் தரக்கூடிய சந்ர்ப்பமாக மாற்றியமைக்கவேண்டும். சர்வதேச அளவில் தொடர் அரசியற் போராட்டங்கள் மூலம் சர்வதேச சமூகங்களின் பல்த ஆதரவைப் பெறுவதும் அப்பலத்துடன் சர்வதேச அரசுகளுக்கு தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுக்கக் கூடிய அரசியற் செயற்பாடுகளை முன்னெடுப்பதும், தீவிரப்படுத்துவதும் உடனடிக் கடமையாக அமைகின்றன.

எமது போராட்டத்தின் இறுதி வெற்றி நோக்கி முழு மூச்சுடன் போராடுவோம்.


வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064


## ஜவன் என்ன கூற வருகின்றார்?

சுதந்திர ஆணைக்குழுக்கள் நான்கினை அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தும் பிரச்சனையுடன் தமிழ் தேசியப்பிரச்சனைக்கான தீர்வினை சம்பந்தப்படுத்தும் ஒரு வாதம் விக்டர் ஐவன் அவர்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இவ்விதமான சம்பந்தப்படுத்தல் குறித்து தமிழ்தரப்பின் ஒரு பகுதி மாற்றுக்கருத்தினை முன்வைத்துள்ளது. எனினும் போதுமான விளக்கங்களும் நியாயங்களும் வைக்கப் படாதபடியால், தமிழ் தேசியவாதம் ஜனநாயக அம்சங்கள் உறுதிபபடுத்தப்படுவதற்கு எதிரானது போன்ற ஒரு தோற்றப்பாட்டைக் கொடுக்கும் ஆபத்து இங்கு உள்ளது.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக சீர்குலைந்து கிடக்கும் சிறிலங்கா அரசின், அரசாங்கங்களின் ஆட்சிமுறை அவலங்கள் பற்றிய அவரது வாதங்களில் நமக்கு முற்றிலும் உடன்பாடு உள்ளது. அதற்கான பொறுப்பை சிங்கள தேசம் பொறுப்பெடுக்க வேண்டுமே ஒழிய அது தமிழ் தேசத்துடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. சிங்கள தேசம் மற்றொரு தேசத்தின் மீதான அடக்குமுறையினூடாக தனக்குத்தானே போட்டுக்கொண்ட அடிமைச் சங்கிலியை அதுவேதான் தகர்க்க வேண்டும். அத்தனை அரச பயங்கரவாத சட்டங்களை மௌனமாக ஏற்றுக்கொண்ட மைக்கும் அதன் நிழலில் நடைபெற்று வந்த பாசிச வகை நடவடிக்கைகளுக்குமான பொறுப்பை சிங்கள தேசமே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் தேசம் தனது சுயநிர்ணயம், தேசிய இறைமை என்பவற்றுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. தனது ஆட்சிமுறை எப்படியிருக்க வேண்டும் என்பதை அது தீர்மானித்துக்கொள்ளும். அதற்கு தனது ஜனநாயகபூர்வமான ஆதரவை ஐவனும் அவரது கருத்துக்கு ஆதரவானவர்களும் தந்தால் போதுமானது. அல்லது தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை குறித்தும் தமிழ் தேசத்தின் மீது சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் தேசிய அடக்குமுறை இனஅழிப்பு என்பவற்றை சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கும் கடமையை செய்தால் போதும், அதைவிட்டு, நான்கு ஆணைக்குழு அது இதுவென சுற்றிவளைத்து மீண்டும் பூச்சியத்திற்கு வரவேண்டியதில்லை.

ஜே.ஆர் இந்திய அரசுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ்தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக, மாகாணசபைத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது. சிங்கள மக்களின் அபிலாசை களையும் தீர்க்க வேண்டும் என சிறிலங்கா விலுள்ள மாகாணங்களுக்கும் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றதற்கும். கூர்மையடைந்திருக்கும் தமிழ்தேசிய பிரச்சனைக்கும் நான்கு ஆணைக்குழு சமாச்சரத்தைக் கொண்டு வந்து முடிச்சுப்போடுவதற்கும் இடையில் ஒரு பொதுத்தன்மை காணப்படுவதை சுட்டிக் காட்டுவதில் தவறில்லை. ஒவ்வொருவரும் தம்முடைய பாவச் சுமைகளை தாமே சுமந்தாக வேண்டுமே ஒழிய, மற்றொருவரின் முதுகில் சுமத்திவிட்டு கைகளை வீசிக்கொண்டு பிரச்சனைக்கு பின்னே நடைபோடுவது அப்பட்டமான சந்தர்ப்பவாதமாகும்.

திருவாளர் ஐவன் குறிப்பிட்ட கட்டுரையில் முன்வைத்துள்ள பல்வேறு கருத்துக்களில் இந்த வகைப் போக்குகளும் வாதங்களும் நிரம்பிக் காணப்படுவதனால் அவை ஒவ்வொன்றுக்கும் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை.

- தாரிணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்